FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

(Under Section 173 BNSS)
(பா.கு.பா.ச பிரிவு 173 இன் கீழ்)

~~(Under Section 154 Cr.P.C.)~~
~~(குற்ற வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

C 8109789

1. District : Virudhunagar மாவட்டம் | PS: Vigilance and Anti Corruption காவல்நிலையம் | Year: 2025 ஆண்டு | FIR No.: 05/2025 மு.த.அ. எண் | Date: 29.06.2025 நாள்

PC Act 1988 as Amended in 2018 u/s 7

2. (i) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

(ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும்: 15.04.2025 ஆம் தேதியிலிருந்து 20 நாட்களுக்கு பின்னர்

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 27.05.2025 at | Date to : நாள் வரை 11.30 hrs

Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 27.06.2025 at | Time to : நேரம் வரை 12.15 hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 29.06.2025 | Time : நேரம் 17.00 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 29.06.2025 | Time : நேரம் 17.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — About 50 Kms / South West

Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.மாரிமுத்து | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு.முத்து

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 19.05.1976 | (d) Nationality : நாட்டினம் Indian | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் விவசாயம் | (g) Address : முகவரி க.எண்.4/8/1048, முத்துராமலிங்கநகர், ரிசர்வ் லையன், சிவகாசி மேற்கு, விருதுநகர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு.கனகராஜ், மல்லி பிர்கா சர்வேயர், ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா, விருதுநகர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- வாதியால் தாமதம் -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

Not arise

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

Not arise

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது.

நான் இன்று 29.06.2025 மாலை 17.00 மணியளவில் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, விருதுநகர் மாவட்டம், சிவகாசி மேற்கு, ரிசர்வ் லையன், முத்துராமலிங்க நகரை சேர்ந்த திரு.முத்து என்பவரின் மகன் திரு.மாரிமுத்து என்பவர் என் முன்பாக ஆஜராகி விபரம் சொல்லி கொடுத்த புகார் மனுவையும் அத்துடன் இணைத்திருந்த ஒரு துண்டு பேப்பரையும் பெற்று, அவற்றை படித்துப்பார்த்து, மேலும் அவரிடம் விபரம் கேட்டு தெரிந்து கொண்டேன். உடன் அந்த புகார் மனு தொடர்பாக இரகசிய விசாரணை செய்ததில், எதிரிமீது எதிர்மறையான குறிப்புகள் இருந்ததாலும், வாதி மீது நம்பகத்தன்மையான குறிப்புகள் இருந்ததாலும், வழக்குப்பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருந்ததாலும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, தென் சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு வாய்மொழியாக தகவல் தெரிவித்துவிட்டு, இன்று 29.06.2025 இரவு 20.00 மணிக்கு காலம் 7-இல் கண்ட எதிரிமீது விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.05/2025 சட்டப்பிரிவு 7 of the Prevention of Corruption Act 1988 as amended in 2018-இன்படி வழக்குப்பதிவு செய்தேன். வாதி திரு.மாரிமுத்து அவர்களது புகார் விபரம்

/தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது/

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அதிகாரியின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் R. RAMANATHAN
Rank: நிலை INSP. OF POLICE.

விருதுநகர் மாவட்ட ஊ.த.க. பிரிவு குற்ற எண்.05/2025 பிரிவு 7 of Prevention of Corruption Act 1988 as amended in 2018-இன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி

பின்வருமாறு :- அனுப்புநர் :- மு.மாரிமுத்து, 49/2025, த/பெ.முத்து, கதவு எண்.4/8/1048, முத்துராமலிங்க நகர், ரிசர்வ் லைன், சிவகாசி மேற்கு, விருதுநகர் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, விருதுநகர். அய்யா, நான் விருதுநகர் மாவட்டம், சிவகாசி மேற்கு, ரிசர்வ் லைன், முத்துராமலிங்க நகரில் குடும்பத்துடன் குடியிருந்து, விவசாயம் செய்து வருகிறேன். விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா, மல்லி கிராம சர்வே எண்.1450-இல் கட்டுப்பட்ட தலா 1200 சதுர அடி கொண்ட ப்ளாட் எண்கள்.1284, 1281, 1280 காலிமனையிடங்களை கடந்த 24.03.2006 அன்று ஸ்ரீவில்லிபுத்தூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்கள்.1599, 1600 மற்றும் 1601 மூலம் கிரையம் பெற்றேன். அதேபோல், முத்துவெங்கிட்டராயபுரம் கிராம சர்வே எண்கள்.210/4 மற்றும் 210/2-இல் கட்டுப்பட்ட முறையே 1215 சதுர அடி மற்றும் 1173.75 சதுர அடி கொண்ட பிளாட் எண்கள்.1533 மற்றும் 1538 காலிமனையிடங்களை கடந்த 17.11.2006 அன்று ஸ்ரீவில்லிபுத்தூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்கள்.5528 மற்றும் 5529 மூலம் கிரையம் பெற்றேன். மேற்படி 5 காலிமனையிடங்களுக்கு என்னுடைய பெயரில் சப்டிவிசன் பட்டா மாறுதல் பெறாமல் இருந்து வந்தேன். அதனால் என்னுடைய பெயரில் சப்டிவிசன் பட்டா மாறுதல் செய்வதற்கு கடந்த 15.04.2025 அன்று சிவகாசியிலுள்ள இ-சேவை மையத்தில் விண்ணப்பம் செய்து, ஒப்புகை சீட்டுகள் பெற்றேன். பின்னர் சுமார் 20 நாட்கள் கழித்து, ஒரு நாள் மதியம் 12.00 மணியளவில் சம்மந்தப்பட்ட ஆவணங்களுடன் ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா ஆபிசிலுள்ள சர்வே பிரிவிற்கு சென்று, மல்லி பிர்கா சர்வேயர் திரு.கனகராஜ் என்பவரை சந்தித்து, எனது பெயரில் சப்டிவிசன் பட்டா மாறுதல் செய்வது சம்மந்தமாக ஒப்புகை சீட்டுக்களை காண்பித்து கேட்டேன். அதற்கு அவர் நீங்க இ-சேவை மையத்தில் பதிவேற்றம் செய்தது எனது இணையதள முகவரிக்கு வந்துள்ளது என்று கூறி நான் கொண்டு சென்ற ஆவணங்களை பெற்று பார்த்துவிட்டு, ஒரு பிளாட்டிற்கு தலா 2000 ரூபாய் வீதம் 10 ஆயிரம் பணம் கொடுத்தால் தங்களுக்கு சப்டிவிசன் பட்டா மாறுதல் செய்ய பரிந்துரை செய்வேன் என்று சொன்னார். அதற்கு நான் அவரிடம், நான் பத்திரம் பதிந்தபோதே சப்டிவிசன் பீஸ் கட்டியிருந்தேன், இருந்தாலும், ரொம்ப வருசம் ஆயிடுச்சேன்னுதான் இப்ப இ-சேவை மையத்தில விண்ணப்பித்தபோதும், சப்டிவிசன் பீஸ் கட்டியிருக்கேன், இந்த 10,000/- பணம் எப்படி கட்டனும் சார் என்று கேட்டேன். அதற்கு அவர், நான் சொல்ரது உங்களுக்கு புரியலயா, எனக்கு நீங்க தனியா இந்த 10,000/- பணம் கொடுக்கனும் என்றும், இதுவே உங்களுக்கு குறைச்சுதான் சொல்ரேன் என்றும் சொன்னார். அதற்கு, என்ன சார், 10,000 வேற உங்களுக்கு தனியா கொடுக்கனுமா? என்று கேட்டேன். அதற்கு அவர், சரி 2,000/- குறைச்சுட்டு ரூ.8,000/- கொண்டுவந்து கொடுங்க, உங்க வேலையை முடிச்சு கொடுத்திடுறேன் என்று சொல்லி அனுப்பிவிட்டார். அவருக்கு லஞ்சமாக பணம்

கொடுக்க எனக்கு விருப்பமில்லாமல் இருந்தேன். அதன்பிறகு 27.05.2025 அன்று 11.30 மணியளவில் ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா ஆபிசிலுள்ள சர்வே பிரிவிற்கு சென்று, மல்லி பிர்கா சர்வேயர் திரு.கனகராஜ் அவர்களை சந்தித்து என்னுடைய பெயரில் சப்டிவிசன் பட்டா மாறுதல் செய்வது தொடர்பாக கேட்டேன். அப்போது அவர் என்னிடம், உங்ககிட்ட ஏற்கனவே ரூ.8,000/- பணம் கேட்டிருந்தேன், கொண்டுவாரேனு சொல்லிட்டு போனீங்க, வரவேயில்ல ஆன்லைன்ல சர்வே எண்ணையும் தவறா ஏத்திவிட்டிறிக்கீங்க, அதனால உங்க சப்டிவிசன் பட்டா மாறுதல் ஆன்லைன் மனுவை நிராகரிச்சிதான் பரிந்துரை செஞ்சிருக்கேன். உங்க செல்போனுக்கும் சப்டிவிசன் பட்டா மாறுதல் மனு தள்ளுபடியாகி விட்டதுன்னு மெசேஜ் வந்திருக்குமேன்னு சொன்னார். உடனே செல்போனுல மெசேஜ் பார்க்குற பழக்கம் எனக்கு இல்ல சார் அதனால எனக்கு தெரியாம போச்சு சார் என்று சொல்லி, இப்ப நான் என்ன செய்யனும் சார் என்று கேட்டேன். உடனே அவர், அருகிலிருந்த அலுவலர் ஒருவரை அழைத்து என்னுடைய ஆவணங்களின் நகலை கொடுத்து, ஆன்லைனில் அப்லை செய்வதற்குரிய சரியான சர்வே நம்பரையும், செலான் 2 என்று எழுதி கொடுக்க சொன்னார். அவரும் என்னுடைய ஆவணங்களை பார்த்து ஒரு துண்டு பேப்பரில் சர்வே நம்பர்களையும், செலான் 2 என எழுதி கொடுத்தார். பின்னர் பிர்கா சர்வேயர் என்னை தனியாக அழைத்து சென்று, என்னிடம் அந்த துண்டு பேப்பரை வாங்கி பார்த்துவிட்டு, இதில் உள்ளதுபோல் ஆன்லைனில் சர்வே நம்பர அப்லை பண்ணுங்க என்றும், 5 செலான் கட்டுவதற்கு பதிலாக 2 செலான் மட்டும் கட்டுங்க என்றும் சொல்லி, ஆன்லைனில் அப்லை பண்ணுனதிலிருந்து 30 நாட்கள் கழித்து அலுவலகத்திற்கு வந்து என்னை பாருங்க, வரும்போது ஏற்கனவே நான் கேட்ட ரூ.8,000/- பணத்தை கொண்டுவந்து கொடுங்க என்று சொன்னார். அதற்கு நான் ஏற்கனவே நிறைய செலவாச்சு எனக்கு அவ்வளவு பணம் புரட்ட முடியாது சார் என்று சொன்னேன். அதற்கு அவர் ரூ.7,000/- பணத்தையாவது ரெடிபண்ணி கொண்டுவந்து கொடுங்க இப்ப போங்க என்று சொல்லி அனுப்பி வைத்தார். அப்போதும் அவருக்கு லஞ்சமாக பணம் கொடுக்க எனக்கு விருப்பமில்லாமல் இருந்தேன். பின்னர் அன்றே (27.05.2025) நான் சிவகாசியிலுள்ள இ-சேவை மையத்தில் விண்ணப்பம் செய்து, 2 செலான்களுக்கு மட்டும் பணம் செலுத்தி ஒப்புகை சீட்டுகள் பெற்றேன். அதன்பிறகு மேற்படி மல்லி பிர்கா சர்வேயர் திரு.கனகராஜ் சொன்னதுபோல், 30 நாட்கள் கழித்து 27.06.2025 அன்று காலை 12.15 மணியளவில் ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா ஆபிசிலுள்ள சர்வே பிரிவிற்கு சென்று, பிர்கா சர்வேயர் திரு.கனகராஜ் அவர்களை சந்தித்து, என்னுடைய பெயரில் சப்டிவிசன் பட்டா மாறுதல் செய்வது சம்மந்தமாக கேட்டேன். அப்போதும் அவர் என்னிடம், நான் கேட்ட ரூ.7,000/- பணம் கொண்டுவந்திருக்கீங்களா என்று கேட்டுக் கொண்டே, என்னங்க மறுபடியும் முத்துவெங்கிட்டராயபுரம் பிளாட்டுகளுக்கு தப்பா சர்வே நம்பரை ஏத்திவிட்டிருக்கீங்க, அத நான் நிராகரிச்சுத்தான் பரிந்துரை செய்வேன் என்றும், மற்ற 3 பிளாட்டுகளுக்கு சர்வே நம்பர் சரியா ஏத்திருக்கீங்க, நீங்க நான் கேட்ட பணத்தை கொடுத்துடுவீங்கன்னு நம்பிக்கையில அவற்றிற்கு

பரிந்துரை செய்துட்டேன், உங்களுக்கு பட்டா கிடைக்கும் என்றும் சொன்னார். அப்போது நான், எனக்கு சார் திருப்பி 2 பிளாட்டுகளுக்கு சர்வே நம்பர் தர்மா இருக்குனு சொல்லீங்க, நீங்க சொன்னபடியேவே நான் சர்வே நம்பரை எடுத்துகோனம் சார் என்று சொன்னேன். அப்போது அவர், சரி நான் திருப்பி பார்த்துட்டு அனைதையும் பரிந்துரை செய்திருறேன் என்று சொல்லிக்கொண்டே, எனனிடம் பணத்தை திருப்பி கேட்டார். அப்போது நான், இப்ப பணம் இல்ல சார், இன்னும் கொஞ்சம் குறைச்சா நல்லா இருக்கும் சார் என்று சொன்னேன். அதற்கு அவர், என்னங்க பஞ்சாயாட்டு பாடுறீங்க, சரி ரூ.2,000/- குறைச்சுகிட்டு ரூ.5,000/- பணத்தையாவது கொண்டுவாங்க, ரூ.5000/- பணம் கொண்டுவந்து கொடுத்தாதான் உங்க பெயரில் மீதமுள்ள 2 பிளாட்டுகளுக்கு சப்டிவிசன் பட்டா மாறுதல் செய்ய பரிந்துரை செய்வேன் என்றும், இல்லைனா ஏதாவதொரு காரணம் கூட்டி, உங்க ஆன்லைன் மனுவை நிராகரிச்சு பரிந்துரை செய்து, உங்களுக்கு சப்டிவிசன் பட்டா மாறுதல் கிடைக்கவிடாமல் செய்து விடுவேன் என்றும் கராறாக சொல்லி அனுப்பி விட்டார். மல்லி பிர்கா சர்வேயர் திரு.கனகராஜுக்கு லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை. அந்த நேரத்தில் அவரிடம் சரி என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். என்னிடம் என்னுடைய பெயரில் 3 பிளாட்டுகளுக்கு சப்டிவிசன் பட்டா மாறுதல் செய்ய பரிந்துரை செய்ததற்கும், மீதமுள்ள 2 பிளாட்டுகளுக்கு சப்டிவிசன் பட்டா மாறுதல் செய்ய பரிந்துரை செய்வதற்கும் ரூ.5,000/- பணத்தை லஞ்சமாக கேட்ட மல்லி பிர்கா சர்வேயர் திரு.கனகராஜ் என்பவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறேன். இத்துடன் 27.05.2025 அன்று சர்வேயர் திரு.கனகராஜ் சொன்னதன்படி அவருக்கு அருகே இருந்த ஒரு அலுவலர் எழுதிக்கொடுத்த துண்டு பேப்பரையும் இணைத்துள்ளேன். இப்படிக்கு (sd) M.Marimuthu 29/6/2025 (M.Maarimuthu) Sir, Received the complaint along with a pit paper on 29.06.2025 at 17.00 hrs. The genuineness of the complaint was verified through sources and found to be genuine. The integrity and antecedent of the accused was also verified through sources and found bad. Found prima-facie for the allegation of the complaint. Since registration of regular case is warranted. The matter is intimated to the SP/SR, V&AC, Chennai and registered a case in Viruthunagar V&AC Cr.No.5/2025 u/s 7 of the P.C Act 1988 as amended in 2018 on 29.06.2025 at 20.00 hrs and took up for investigation. (Sd) (R.Boominathan) 29/06/2025 INSP of Police, V&AC,VNR.

The original FIR along with original complaint and pit paper are submitted to the court of the Principal District Judge / Special Judge for P.C. Act cases, Virdhunagar District at Srivilliputhur and copies submitted to the concerned officers.